ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2463/28 - 2025 නොවැම්බර් මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.11.20**

2463/28 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**கம்புறுபிட்டிய பிரதேச சபை**

கேளிக்கை வரி

1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க கேளிக்கை வரி (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கேளிக்கை வரி கட்டளைச் சட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ள கேளிக்கை நடவடிக்கைகளுக்காக அறவிடப்படும் நுழைவுக் கட்டணத்தில் நூற்றுக்குப் பத்து வீதமான (10%) கேளிக்கை வரி ஒன்றை விதிக்கப்பட்டு அறவிடுவதற்கு 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கேளிக்கை வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப கம்புறுபிட்டிய பிரதேச சபையின் செயலாளர் மூலம் தீர்மானப் புத்தகத்தில் 2024.01.23/ 59 ஆம் தீர்மான இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் தென் மாகாண கௌரவ ஆளுநர் பந்துல ஹரிஸ்சந்திர ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்ளூராட்சி (நேரொத்த ஏற்பாடுகள்) சட்டத்தினால் என் மீது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தென் மாகாண ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்டது என்பதை இதன் மூலம் அறிவிக்கிறேன்.

**எம். கே. பந்துல ஹரிஸ்சந்திர,**
ஆளுநர்,
தென் மாகாணம்.

தென் மாகாண ஆளுநர் செயலாளர் அலுவலகம்,
காலி,
2025, ஒற்றோபர் 23.



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க கேளிக்கை வரி (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கேளிக்கை வரி கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் உறுப்புரையினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கம்புறுபிட்டிய பிரதேச சபை நிர்வாக எல்லைக்கு உள்ளான பிரதேசத்தில் நடாத்தப்படும் குறித்த கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் கேளிக்கை நடவடிக்கை ஒன்றுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவில் நூற்றுக்குப் பத்து வீதத்துக்கு சமமான தொகையான (10%) வரியொன்றாக விதிக்கப்பட்டு அறவிட வேண்டும் என 2024.01.23 ஆம் திகதிய 59 ஆம் தீர்மான இலக்கத்தின் மூலம் என்னால் தீர்மானிக்கப்படுவதோடு இந்த தீர்மானத்தை வர்த்தமானப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட மாதத்துக்குப் பின்னர் தொடங்கும் மாதத்தில் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் மேலே விதிக்கப்பட்ட கேளிக்கை வரியை குறித்த கேளிக்கை நடவடிக்கை நடாத்தப்படும் திகதிக்கு முன்னர் உரிய அமைப்பாளர் அல்லது அமைப்பாளர்களினால் உரிய முறையில் கம்புறுபிட்டிய பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் எனவும் கம்புறுபிட்டிய பிரதேச சபையின் செயலாளர் ஆகிய என்னால் தீர்மானிக்கப்பட்டது.

EOG 11 - 0151

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.